# 08-01-2025 செய்தி

## நகர்மயமாதலின் அறிகுறி!

- திறமையான நிர்வாகத்துக்கு முறையான புள்ளிவிவரத் தகவல்கள் அவசியம். 11 ஆண்டுகளாகக் கைவிடப்பட்ட குடும்ப நுகர்வுச் செலவு ஆய்வு கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்படுவது வரவேற்புக்குரிய செயல்பாடு.
- மக்கள்தொகை கணக்கெடுப்பும் நடத்தப்பட்டிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். தேசிய புள்ளிவிவரத் துறை மூலம் நடத்தப்படும் குடும்ப நுகர்வுச் செலவு ஆய்வு குடும்ப வருமானம், நுகர்வு உள்ளிட்டவை குறித்த விவ ரங்களைத் தெரிந்துகொள்ள உதவுகிறது.
- 2011-12-க்குப் பிறகு நடத்தப்படாத இந்த ஆய்வு 2022-23, 2023-24 நிதி ஆண்டுகளில் நடத்தப்பட்டிருப்பது மக்கள் தங்களது வருவாயை எப்படிச் செலவழிக்கிறார்கள் என்பது குறித்தும், இந்தியப் பொருளாதாரம் எந்த திசையை நோக்கி நகர்கிறது என்பது குறித்தும் தகவல்களை வழங்குகிறது.
- அண்மையில் வெளிவந்திருக்கும் 2023-24 ஆய்வு அறிக்கை ஆகஸ்ட் 2023-க்கும்.
- ஜூலை 2024-க்கும் இடையே 2.6 லட்சம் குடும்பங்களில் தகவல்களைத் திரட்டி தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் இலவசமாக வழங்கப்பட்டவையும், சமூகநலத் திட்டங்கள் மூலம் பெறப்பட்டவையும் குடும்ப நுகர்வில் சேர்க்கப்படவில்லை.
- குடும்ப நுகர்வு முந்தைய நிதி ஆண்டைவிட சற்றுதான் அதிகரித்திருக்கிறது. சராசரி கிராமப்புற குடும்பங்களின் 2023-24 நுகர்வான 3.5% என்பது. முந்தைய 12 ஆண்டு சராசரியான 3.1%-ஐ விட சற்றுதான் அதிகம், அதேநேரத்தில் நகர்ப்புற குடும்ப நுகர்வு 2.65%-இலிருந்து சமீபத்திய ஆய்வின்படி 3.5%-ஆக அதிகரித்திருக்கிறது.
- கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது நகர்ப்புற குடும்ப நுகர்வு 8.3% அதிகரிப்பையும், கிராமப்புற நுகர்வு 9.2% அதிகரிப்பையும் காட்டுகிறது.
- 2022-23-இல் ரூ.3,773-ஆக இருந்த மாதாந்திர நுகர்வுச் செலவு கிராமப்புறங்களில் 2024-24-இல் ரூ.4,122-ஆக அதிகரித்திருக்கிறது. நகர்ப்புறங்களில் ரூ.6,459-இலிருந்து ரூ.6,996-ஆக அதிகரித்திருக்கிறது.
- இந்த அதிகரிப்பின் கணிசமான பகுதி விலைவாசி உயர்வால் ஏற்பட்டிருக்கக் கூடும். அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தாலும்கூட சராசரி நுகர்வு 3.5% அதிகரித்திருக்கிறது. அதேநேரத்தில் 8.2% ஜிடிபி வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவு என்பதையும் குறிப்பிடத் தோன்றுகிறது.
- கிராமப்புற குடும்பங்கள் நகர்ப்புறங்களைவிட அதிகமாக செலவழிக்கத் தொடங்கியிருக்கின்றன. 2011-12-இல் சராசரி கிராமப்புற செலவுக்கும் நகர்ப்புற செலவுக்குமான இடைவெளி 84% என்றால், 2023-24- இல் சராசரியின் இடைவெளி 70% என்பதை ஆய்வு தெரிவிக்கிறது.
- மொத்த செலவில் உணவுப் பொருள்களுக்கான ஒதுக்கீடு கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் அதிகரித்திருக்கிறது. கிராமப்புறங்களில் 46.4%-இலிருந்து, 47.04%-ஆக அதிகரித்திருக்கிறது என்றால், நகர்ப்புறங்களில் 39.17%-இலிருந்து 39.48%-ஆக மட்டுமே அதிகரித்திருக்கிறது.
- 2011-12 உடன் ஒப்பிடும்போது உணவுப் பொருள்களுக்கான செலவு ஒதுக்கீடு குறைந்திருக்கிறது. ஒருவேளை குடும்பச் செலவில் உணவுப் பொருள்களின் விலைவாசி தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கலாம். 2011-12-இல் 52.9%-ஆக இருந்த சராசரி மாதாந்திர உணவுச் செலவு கிராமப்புறங்களில் 50%-ஆகவும் நகர்ப்புறங்களில் 42.62%- இலிருந்து இப்போது 40%-ஆகவும் குறைந்திருப்பதை ஆய்வு வெளிப்படுத்துகிறது.
- நீண்டகால அடிப்படையில் பார்க்கும்போது உணவுக்கான ஒதுக்கீடு குறைந்திருப்பதை வரவேற்புக்குரிய மாற்றமாகத்தான் கருதத் தோன்றுகிறது. குடும்பங்களில் கல்வி, போக்குவரத்து, பொழுதுபோக்கு உள்ளிட்ட பிற தேவைகளுக்கு மக்கள் அதிகம் செலவழிக்கிறார்கள் என்று இதைப் பார்க்கலாம்.
- அதேநேரத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளின் புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது உணவுக்கான செலவுகள் அதிகரித்திருப்பது கவனத்துக்குரியது. உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்வும், அதன் காரணமாக குடும்பங்களின் இதர நுகர்வுகள் குறைவதும் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்தது அல்ல.
- கிராமப்புறங்களுக்கும் நகர்ப்புறங்களுக்கும் இடையே குடும்பங்களின் நுகர்வுச் செலவு இடைவெளி குறைந்து வருவது ஆய்வு சுட்டிக் காட்டும் மிக முக்கியமான மாற்றம். நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் சராசரி மாதச் செலவினம் அதிகரித்திருக்கிறது. நுகர்வு சமநிலையின்மை குறைந்திருக்கிறது.
- கடந்த பத்தாண்டுகளில் நகர்ப்புற-கிராமப்புற செலவின இடைவெளி 84%-இலிருந்து 70%-ஆக குறைந்திருக்கிறது. இதற்கு கிராமப்புறங்களில் குடும்ப வருவாய் அதிகரித்திருப்பது காரணமாக இருக்கக் கூடும். எண்ம பணப் பரிமாற்றம் கிராமப்புறங்களில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதும், கிராமங்கள் நகர்மயமாவதும் இந்தப் புள்ளிவிவரம் தெரிவிக்கும் சமிக்ஞைகள். இந்தப் போக்கு தொடர வேண்டும்.
- மாநிலங்களுக்கு இடையே குடும்ப வருவாயில் மிகப் பெரிய சமநிலையின்மை காணப்படுவதை ஆய்வு வெளிப்படுத்துகிறது. நகர்ப்புற மாதாந்திர தனிநபர் செலவு குறித்த பின்தங்கிய மாநிலங்களின் புள்ளி விவரம் இவை - சத்தீஸ்கர் (ரூ.4,927), பிகார் (ரூ.5,080), ஜார்க்கண்ட் (ரூ.5,393), உத்தர பிரதேசம் (ரூ.5,395), வளர்ச்சியடைந்த மாநிலங்களான தெலங்கானா (ரூ.8,978), ஹரியாணா (ரூ.8,428), தமிழ்நாடு (ரூ.8,175) கர்நாடகம் (ரூ.8.076) ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது 40% முதல் 50% குறைவு.
- வளர்ச்சி குறைந்த மாநிலங்களில் கிராமப்புற-நகர்ப்புறங்களுக்கு இடையேயான குடும்ப நுகர்வில் மிகப் பெரிய இடைவெளி காணப்படுவதை குடும்ப நுகர்வுச் செலவு ஆய்வு அறிக்கை வெளிப்படுத்துகிறது. சரியான புள்ளிவிவரங்களின் அடிப்படையில் திட்டமிட்டு செயல்ப டுவதன் மூலம்தான் சமச்சீரான வளர்ச்சியை உறுதிப்படுத்தி, பொருளாதார இடைவெளியை அகற்ற முடியும்.